DINAMALAR 18 AUG 09



# குறுகிவரும் மனித மனதை மாற்றுவது கல்வி அறிவு மட்டுமே

## ★ பள்ளி விழாவில் சத்குரு ஜக்கிவாசுதேவ் ஆசியுரை



புதுக்கோட்டை ஈஷா வித்யா ஊரகப்பள்ளியில் சத்குரு ஜக்கிவாசுதேவ் மாணவர்களுடன் கலந்துரையாடினார்.

தூத்துக்குடி, ஆக.18-

குறுகிவரும் மனித மனதை மாற்றுவது கல்வி அறிவு மட்டுமே என தூத்துக்குடி அருகே நடந்த பள்ளி விழாவில் சத்குரு ஜக்கிவாசுதேவ் சுவாமிகள் உரையாற்றினார்.

தூத்துக்குடி அருகே புதுக்கோட்டையில் ஈஷா வித்யா ஊரகப்பள்ளி துவங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இப்பள்ளியில் 340 கிராமப்புற மாணவ-மாணவியர்கள் படித்து வருகின்றனர். இப்பள்ளியில் நேற்று நடந்த விழாவில் ஈஷா அறக்கட்டளை மற்றும் ஈஷா வித்யா திட்டத்தின் நிறுவனர் சத்குரு ஜக்கிவாசுதேவ் பங்கேற்றார்.

விழாவில் பங்கேற்ற சத்குரு ஜக்கிவாசுதேவ் மாணவர்கள் மத்தியில் உரையாடியதுடன் அறிவுரை வழங்கி பேசினார். அப்போது அவர் பேசியதாவது:-

இந்தியாவை பொறுத்தவரை அதிக அளவிலான மக்கள் கல்விஅறிவு என்பது இல்லாமல் இருந்து வருகிறார்கள். இந்த மாதிரியான நிலையை மாற்ற வேண்டும். இதேபோன்று இந்தியாவில் வறுமை மற்றும் வேலையில்லாத திண்டாட்டம் போன்றவற்றாலும் மக்கள் பாதிக்கப்பட்டு வருகிறார்கள். இதில் இருந்து மக்களை காப்பாற்றிட வேண்டும் என்பதை விட இவற்றில் இருந்து மக்களை மீட்க வேண்டுமென்றால் அது தரமான கல்வியால் மட்டுமே முடியும்.

நாட்டின் பொருளாதார நிலையை உயர்த்துவதற்கும் கல்வி என்பது கட்டாய தேவையாகும். கிராமத்தில் உள்ள குழந்தைகளுக்கும் தரமான கல்வி வழங்கவேண்டும். பொருளாதார நிலையை உயர்த்தவேண்டும் என்பதே ஈஷா வித்யா திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். கல்வி முறையில் நல்ல மாற்றங்களையும் கொண்டு வரவேண்டும். கல்வி கற்பிப்பவர்கள் மட்டுமின்றி, கல்வி கற்பவர்களும் புத்திசாலிகளாகவும், விழிப்புணர்வு மிக்கவர்களாகவும் இருக்க வேண்டும். கல்வி அறிவு என்பது போதிய அளவு இல்லாத காரணத்தினால் தான் மக்களின் மனமும் தற்போது குறுகி வருகிறது. குறுகிவரும் மனித மனதை மாற்றுவது என்பது கல்வி அறிவால் மட்டுமே முடியும்.

நாம் அனைவரும் ஒன்றாக இணைந்து கல்வி வளர்ச்சிக்கும், நாட்டின் வளர்ச்சிக்கும் வழிவகுக்கவேண்டும். நமக்குள்ளே ஒற்றுமைக்கு ஏற்படுவதற்கு பதிலாக பிரிவினைகளும், வேற்றுமைகளும் வந்தால் நம்மிடம் தேசிய உணர்வு என்பது இல்லாமல் போய் விடும். எனவே அதற்கு நாம் என்றும் இடம் கொடுத்து விடக் கூடாது. இவ்வாறு அவர் பேசினார்.

விழாவில் பள்ளி மாணவ-மாணவியர்களின் கிராமப்புற கலை தொடர்பான கலைநிகழ்ச்சிகளும் நடந்தது. முன்னதாக சத்குரு ஜக்கிவாசுதேவ் பள்ளி வளாகத்தில் மரக்கன்று நட்டதுடன், பள்ளியில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள நூலகத்தையும் திறந்து வைத்தார்.